தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984 மார்ச் 9, வெள்ளிக்கிழமை

மாசி 26, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல் ''

தலைவரைச் சார்ந்தவர்கள், விருப்பத்தோடு அவர் கேட்கக் கூடிய பயனுள்ள செய்திகளை எடுத்து உரைக்க வேண்டும். பயனற்ற செய்திகளைத் தலைவரே 'சொல்லுக' எனக் கேட்டாலும், சொல்லாது இருப்பதே சிறப்பாகும்.

1. வினாக்கள்—விடைகள்

செவிலியர் பயிற்சிக்கு மீண்டும் ஆண்களைத் தேர்வு செய்யும் திட்டம்.

*189 (*வினா 16229)* திரு. செ. செம்மலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செவிலியர் பயிற்சிக்கு மீண்டும் ஆண்களைத் தேர்வு செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஆம்.

திரு. பா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செவிலியர் பயிற்சி சில காலங்கள் நிறுத்தப்பட்டு இருந்தது. இப்போது எடுக்கப்படுகிற தேர்வில் எவ்வளவு பேர் அனுமதிக்கப்படுவார்கள் ? எந்த எந்த மையங்களில் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 9

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1958 ஆம் ஆண்டுக்கு முன்பு 1 : 6 என்ற முறையில், Male Nurse ஒன்று, Female Nurse 6 என்ற அந்த விகிதாசாரத்தில் அவர்களை நாம் தேர்வுக்காக எடுத்துக்கொண்டிருந்தோம். ஆனால் அதற்குப் பிறகு தேர்வு இல்லை என்று 1958 ஆம் ஆண்டுக்குப் பிறகு தேவையில்லை என்று அன்றைய அரசாங்கம் முடிவு எடுத்தது. இப்போது சில ஆண்டுகளாக குறிப்பிட்ட சில டிபார்ட்மென்டுகளுக்காக, Mental Hospital, Prisons, Sexually transmitted diseases போன்ற இந்தமாதிரியான பகுதிகளுக்கு மேல் நர்ஸ் இருந்தால் நன்றாக இருக்கும், பயனுள்ளதாக இருக்கும் என்ற ஒரு கருத்து தெரிவித்ததின் அடிப்படையில், நாம் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆகவே மீண்டும் தமிழக சர்க்கார் மேல் நர்ஸ்களைக் கொஞ்சம் கொஞ்சமாக, படிப்படியாக, தேவைக்கேற்ப அனுமதி கொடுப்பது என்ற முடிவை எடுத்திருக்கிறது.

வேலூர் மத்திய சிறைச்சாலையிலுள்ள மகளிர் பிரிவு.

190 (*வினா 17633) திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூர் மத்திய சிறைச்சாலை மகளிர் பிரிவில் நீண்ட நாட்களாகப் பெண் மருத்துவர் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஆம். காலியாக உள்ள இப் பணியிடம் நிரப்பப்படும் வரை மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், வேலூர் மத்திய பெண்கள் சிறையில் பெண் மருத்துவர் நீண்டகாலமாக இல்லை என்பதை அமைச்சர் அவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இது நீண்ட நாட்களாக காலியாக இருக்கிறது. மாற்று ஏற்பாடு செய்யப்பட்டும், சிகிச்சை அளிக்க வாய்ப்பு இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்பது நியாயமான கேள்வி. உடனடியாகப் போட வேண்டும் என்று நான் உத்தரவிட்டு இருக்கிறேன். வெகுவிரைவிலே செயல்படுத்தப்படும். அது மீண்டும் செயல்படுத்தப்படாமல் இருந்தால் எனக்கு அதைப் பற்றித் தெரிவித்தால், உடனடியாக உத்தரவு போடுவதற்குச் சரியாக இருக்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS